# சிறுவர் நலன் காப்பு சேவை ஏன் உங்களை தொடர்பு கொள்கிறது?

## நாம் உங்களுக்கு உதவி வழங்குவோம்

நோர்வேயில் வளரும் பிள்ளைகள் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதே சிறுவர் நலன் காப்பு சேவையின் மிக முக்கிய பணியாகும். இதை நாம் முக்கியமாக குடும்பத்திற்கு உதவி வழங்குவதன் ஊடாக செய்து வருகிறோம்.

உங்களது பிள்ளை நல்ல ஓர் நிலவரத்தில் இருக்கின்றதா என்ற விடயத்தில் எவரோ ஒருவர் கவலைக் கொண்டு உள்ளபடியால் தான் நாம் உங்களுடன் தொடர்புகொண்டுள்ளோம். இதனால் தான் அவர்கள் எம்மிடம் புகார் வழங்கி உள்ளார்கள். இத்தருணத்தில் நாம் உங்களை சந்திக்க விரும்புகிறோம். உங்களது நிலவரம் எவ்வாறு உள்ளது, அத்தோடு எமக்கு கிடைத்துள்ள வருத்த முறைப்பாட்டை பற்றி உங்களது கருத்து என்ன என்பதை கேட்டு அறிய விரும்புகிறோம். உங்களுக்கு ஏதாவது விடயத்தில் உதவி அவசியப்படின் உங்களது குடும்பத்திற்கு பயன் அளிக்க வல்ல வேறுபட்ட உதவி ஏற்பாடுகள் பல எம்மிடம் உள்ளது.

சிறுவர் நலன் பேணல் சேவையில் இருந்து நாம் தொடர்புகொள்ளும் போது அது உங்களுக்கு சங்கடமாக இருப்பது முற்றிலும் இயல்பானது. பெற்றோர்கள் தாமாகவே முன்வந்து எம்மிடம் உதவி நாடுவது அல்லது ஒரு பிள்ளை சுயமாகவே எம்மை தொடர்புகொள்வது ஓர் சாதாரணமான விடயம் என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். சிறுவர் நலன் பேணல் சேவையை யாராவது தொடர்புகொண்டால் அதன் கருத்து பிள்ளைகளோ அத்தோடு அவர்களது குடும்பமோ உதவியை பெற்றுக்கொள்வதற்காகவே என்பது அர்த்தமாகும்.

சில சந்தர்ப்பங்களில் வருத்தப்பட வேண்டிய சூழ்நிலைக்கான காரணங்கள் எதுவும் இல்லை என நாம் கண்டறிந்த உடன் அந்த விடயம் அத்தோடு கைவிடப்படும்.

## சிறுவர் நலன் பேணல் சேவை எவ்வாறு உங்களுக்கு உதவ முடியும்?

சிறுவர் நலன் பேணல் சேவை பல வழிகளில் உங்களுக்கு உதவலாம், நீங்கள் ஓர் குடும்பமாக அத்தோடு நாமும் உங்களுடன் இணைந்து ஓர் பலனை அடைவதற்கு நாம் விரும்புகிறோம். குறுகிய காலத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்கு, அநேக சந்தர்ப்பங்களில் ஒரே தருணத்தில் வேறுபட்ட பல விதங்களில் நாம் குடும்பங்களுக்கு உதவி வழங்குவது பொதுவான ஓர் விடயம். நாம் பெற்றோருக்கு ஆலோசனைகள் அத்தோடு அறிவுரைகள் வழங்குவதோடு உங்களுக்கு உதவுவதற்காக நாம் பாடசாலை, சிறுவர் பராமரிப்பு நிலையம், NAV, அரச மருத்துவர் அத்தோடு ஏனையவர்கள் உடன் சேர்ந்து ஒத்துழைப்பது வளமை.
நாம் உங்களுக்கு ஆதரவு வழங்கக்கூடிய ஏனைய வழிகள் எவை என்றால் சிறுவர் பராமரிப்பு நிலைய விண்ணப்பம், பிள்ளைகள் இடையிடையே சென்று வரக்கூடிய குடும்ப ஏற்பாடு அல்லது பிள்ளைகளுக்கான வேறு ஏதாவது உதவிகள் ஆகும்.

## நீங்கள் என்ன உரிமைகளைக் கொண்டுள்ளீர்கள்?

சிறுவர் நலன் பேணல் சேவையை நீங்கள் சந்திக்கும் தருணத்தில் உங்களுக்கு பல உரிமைகள் உண்டு. நீங்கள் எம்மை சந்திக்கும் தருணத்தில் இதுபற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வீர்கள். உரிமைகளில் சில:

- சிறுவர் நலன் பேணல் சேவையை சந்திக்கும் தருணத்தில் மொழிபெயர்ப்பாளரை உபயோகிப்பதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் அவசியம் எனில் இதை எமக்கு தெரிவிக்கவும்.
- சிறுவர் நலன் பேணல் சேவையை சந்திக்கும் தருணம் உங்களுக்கு நம்பகரமான ஓர் நபரை நீங்கள் அழைத்து வருவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. இது பெற்றோர் மற்றும் பிள்ளைகள் ஆகிய இரு தரப்பினருக்கும் செல்லுபடியாகும்.
- விடயத்தை பற்றி முழுமையான தகவல்களை பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு.
- உங்களது சொந்த விடயத்தில் பங்களிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

## சிறுவர் நலன் பேணல் சேவை என்ன கடமைகளைக் கொண்டுள்ளது?

நோர்வேயில் உள்ள அனைத்து நகர சபைகளிலும் சிறுவர் நலன் காப்பு சேவை இருக்க வேண்டும்.

- சிறுவர் நலன் பேணல் சட்டம் இச்சேவைக்கான அடிப்படையாக இருக்க வேண்டும்.
- சிறுவர் நலன் பேணல் சேவையில் உள்ள நாம் ஓர் வருத்த முறைப்பாட்டை பெற்றுக்கொள்ளும் பொழுது அது பற்றி விரிவாக ஆராய வேண்டுமா என கணிப்பீடு செய்ய வேண்டிய கடமை எமக்கு உண்டு. பிள்ளை எப்படி உள்ளது என்பதை ஆராய்ந்துகொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தால், பிள்ளைக்கும் குடும்பத்திற்கும் உதவி ஏதாவது அவசியமா என்பதை கண்டறிய பிள்ளையை சுற்றி செயலாற்றும் பலரிடம் நாம் உரையாடுவோம்.
- பிள்ளை மற்றும் குடும்பத்திற்கு ஓர் சிறந்த வகையில் உதவியை வழங்கும் தருணத்தில் சிறுவர் நலன் பேணல் சேவை ஏனைய உதவி நிறுவனங்கள் உடன் ஒத்துழைக்க வேண்டும்.
- குடும்பத்தின் கலாச்சாரம், இனம், மதம் அத்தோடு மொழி ஆகியவற்றை சிறுவர் பராமரிப்பு நிலையம் கருத்தில் கொள்ள வேண்டும்.
- பிள்ளைக்கும் பெற்றோருக்கும் நல்ல முறையில் தகவல்கள் கிடைப்பதையும் அத்தோடு தாம் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பையும் சிறுவர் நலன் பேணல் சேவை உறுதி செய்ய வேண்டும்.

**பிள்ளை அல்லது குடும்பம் ஓர் சிக்கலான நிலையில் இருக்கும் பொழுது சிறுவர் நலன் பேணல் சேவை பிள்ளைக்கும் குடும்பங்களுக்கும் உதவலாம். சிறுவர் நலன் பேணல் சேவை பற்றிய மேலதிக தகவல்களைப் பெற நாடுங்கள்: bufdir.no/barnevern.**